**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF THE SESSIONS JUDGE,**
**MAHALIR NEETHIMANDRAM, MADURAI.**

| | |
|---|---|
| Sessions Case | - **S.C No. 101/2017** |
| Deposition of witness for | - P.W. 18 |
| Name | - டாக்டர்.முகமது நாசிம் |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **29.09.2023**

**எதிரி ஆஜர்:**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதுரை மருத்துவக்கல்லூரி சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 28.01.2016ம் தேதி மதுரை மருத்துவக்கல்லூரியில் உதவி மருத்துவராக இருந்தபோது தெப்பக்குளம் காவல் நிலைய குற்றஎண் 55-2016 வழக்கில் வருவாய் கோட்டாட்சியர், மதுரை அவர்கள் கொடுத்த லெட்டர் எண்.673/M/16 அவர்களின் வேண்டுகோள் கடிதம் பெற்று அங்க மச்ச அடையாளம் தலைமை காவலர் பாலு 1036 என்பவரால் அடையாளம் காண்பிக்கப்பட்ட இறந்து போன திருமதி.ரோஸி வயது 23 என்பவரை நானும் டாக்டர் சரவணன் என்பவரும் சேர்ந்து உடற்கூராய்வு செய்ய ஆரம்பித்தோம். 28.01.2016ம் தேதி சுமார் பிற்பகல் 03.40 மணியளவில் பிணக்கூராய்வு ஆரம்பிக்கப்பட்டது. பிண விரைப்பு

தன்மையானது உடல் முழுவதும் பரவி காணப்பட்டது. மிதமான போசாக்கான 23 வயதுடைய பெண் பிரேதம் கை, கால் நகங்கள் நீல நிறத்தில் காணப்பட்டது. மேலும் மலவாய் வெப்பம் 21டிகிரி சென்டிகிரேட் அளவுடன் காணப்பட்டது. **இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு:**

1.கோடிட்ட சிராய்ப்பு காயமானது 3செமி X 0.5 செ.மீ நீள அகலமாக இருந்தது. இடது பக்க பக்கவாட்டு தலையில காணப்பட்டது.

2. கோடிட்ட சிராய்ப்பு காயமானது 2செ.மீ X0.5செ.மீ நீள அகலத்துடன் இடது பக்க பக்கவாட்டு தலையில் காணப்பட்டது.

3. தையலிடப்பட்ட காயமானது 6செமீ.X 1 செ.மீ நீள அகலத்துடன் எலும்பு வரை ஆளத்தில் வலது பக்க பக்கவாட்டு தலையில் காணப்பட்டது.

4.தையலிடப்பட்ட காயமானது 1செ.மீ X 1செ.மீ எலும்பு வரை ஆழத்தில் வலது பக்க பக்கவாட்டு தலையில் காணப்பட்டது.

5."C" வடிவத்தில் அறுவைசிகிச்சையினால் ஏற்பட்ட காயமானது 34 செமீ X 1செமீ எலும்பு வரை ஆழத்துடன் இடது பக்க முன் பக்கவாட்டு தலையில் காணப்பட்டது.

6. செயற்கை சுவாசத்திற்காக அறுவைசிகிச்சையினால் உண்டாக்கப்பட்ட காயமானது கழுத்தின் முன்புற மூச்சுக்குழாய் பகுதியில் காணப்ப்ட்டடது.

தலைப்பகுதி கூராய்வு செய்ததில்:

தலை தோலின் அடிப்புறத்தில் 16செமPX10செமீ நீள அகலத்துடன் கன்றிய காயமானது இடது பக்க முன் மற்றும் பக்கவாட்டு பகுதியில் காணப்பட்டது. சுமார் 16செமீX10செமீ அளவுடன் கபால எலும்பானது அறுவை சிகிச்சையினால் எடுக்கப்பட்டு இடது பக்க முன் மற்றும் பக்கவாட்டு பகுதியில் காணப்பட்டது. இடது பக்க பக்கவாட்டு பகுதியில் அறுவைசிகிச்சைக்காக ஆறு

துளைகள் காணப்பட்டது. மேலும் மூளைப்பகுதியில் ஜெல்போர்ம் மெட்டீரியல் அடைக்கப்பட்டது. மேலும் இரத்தமானது மூளையின் இரண்டு பக்க கதுப்புகளிலும் கசிந்து காணப்பட்டது. மேலும் மூளையின் சுமார் 3செமீX1செமீx.5 செமீ நீள அகல மற்றும் தடிமன் உள்ள சிதைந்த காயம் இடது பக்க பக்கவாட்டு பகுதியில் காணப்பட்டது. இதர பகுதியில் வயிற்றறை மற்றும் மார்பறை காலியாக இருந்தது. இதயத்தை சுற்றியுள்ள அறையில் 15மி வைக்கோல் நிற திரவம் காணப்பட்டது. இதயத்தில் வலது பக்க அறையில நீர்ம நிலையில இரத்தமும் இடது பக்கம் காலியாகவும் இருந்தது. இதயத்திற்கான இரத்தநாளம் சாதாரண நிலையில் காணப்பட்டது. நுரையீரல் பகுதி செறிந்த நிலையில் காணப்பட்டது. மூச்சுக்குழாய் சாதாரண நிலையில் காணப்பட்டது. நாவடி எலும்பு இருந்த நிலையில் இருந்தது. இரைப்பையில் 200மில்லி பழுப்பு நிறதிரவம் எவ்வித நெடியும் இன்றி உட்புற சவ்வசானது சாதாரண நிலையில் இருந்தது. கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம் இரத்தம் செறிந்த நிலையில் காணப்பட்டது. சிறுகுடலானது 20மில்லி பழுப்பு நிற திரவம் எவ்வித நெடியும் இன்றி உட்புற சவ்வானது சாதாரண நிலையில் காணப்பட்டது. சிறுநீரகப்பை காலியாக இருந்தது. கர்ப்பப்பை சாதாரண நிலையில் உட்புறம் காலியாக இருந்தது. மூளை பகுதி மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. அன்றைய தினம் உறுப்புகள் ரசாயன பகுப்பாய்விற்காக அனுப்பப்பட்டது. 03.03.2016ம் தேதி ரசாயன பகுப்பாய்விற்கான அறிக்கை பெறப்பட்டு அன்றைய தினம் இறுதி கருத்து வழங்கப்பட்டது.

**இறுதி கருத்து:**

**இறந்த நபரானவர் அவருக்கு தலையில் ஏற்பட்ட காயத்தினால் இறந்திருக்கலாம் என்று** கருத்து கூறி நானும் டாக்டர் சரவணன் இரண்டு

பேரும் சேர்ந்து கொடுத்த இறுதி கருத்து வழங்கினோம். **அந்த பிரேத பரிசோதனை அறிக்கை அதசாஆ.8 ஆகும். நான் வழங்கிய இறுதி கருத்துரை அதசாஆ.9 ஆகும்.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் இறந்துவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரணை செய்த பின்னர் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்தற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு ”சரி” என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை.